**நவம்பர் – 07**

# TNPSC துளிகள்


- தமிழ்நாட்டின் கோயம்புத்தூர் பகுதியைச் சேர்ந்த பாரம்பரிய சிறுமுகை மென்பட்டு புடவைகளுக்குப் புவி சார் குறியீட்டினை (GI) பெற விண்ணப்பித்துள்ளனர்.
- இந்துஜா குழுமத்தின் தலைவர் கோபிசந்த் பர்மானந்த் ஹிந்துஜா இலண்டனில் காலம் ஆனார்.
- NLC தமிழ்நாடு பவர் லிமிடெட் (NTPL) நிறுவனமானது, தூத்துக்குடியில் ஒரு வாக்கத்தான் (பெரு நடைப் போட்டி) மற்றும் ஃபிட் இந்தியா ஃப்ரீடம் ரன் 6.0 ஆகிய நிகழ்வுகளை ஏற்பாடு செய்தது.
- வங்காளதேச அரசானது UNICEF, Gavi மற்றும் உலக சுகாதார அமைப்பு ஆகியவற்றின் ஆதரவுடன், உலகின் எட்டாவது நாடாக, நாடு தழுவிய அளவிலான டைபாய்டு இணை தடுப்பூசி (TCV) வழங்கீட்டுப் பிரச்சாரத்தை அதிகாரப்பூர்வமாகத் தொடங்கியது.

# தமிழ்நாட்டுச் செய்திகள்

## 18 மசோதாக்களில் ஒன்பது மசோதாக்களுக்கு ஆளுநரின் ஒப்புதல்


- மாநிலச் சட்டமன்றத்தின் குளிர்காலக் கூட்டத் தொடரில் ஏற்றுக் கொள்ளப்பட்ட 18 மசோதாக்களில் ஒன்பது மசோதாக்களுக்கு ஆளுநர் R.N. ரவி ஒப்புதல் அளித்துள்ளார்.
- ஆளுநரின் ஒப்புதலைப் பெற்ற ஒன்பது மசோதாக்களில் தமிழ்நாடு நிதிப் பொறுப்பு (திருத்தம்) மசோதா, 2024 அடங்கும்.
- 2024 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதத்தில், முதலில் அவையால் ஏற்றுக் கொள்ளப்பட்ட இந்த மசோதாவை ஆளுநர் திருப்பி அனுப்பினார்.
- இந்த அமர்வின் போது அந்த மசோதா மீண்டும் ஏற்றுக் கொள்ளப்பட்டது.
- சபைக்குத் திருப்பி அனுப்பப்பட்ட ஒரு மசோதாவிற்கு ஆளுநர் ரவி ஒப்புதல் அளித்தது இதுவே முதல் முறை ஆகும்.
- மாநில அரசாங்கத்துடன் பல வருடங்களாக ஏற்பட்ட மோதல்களுக்குப் பிறகு, அவர் தனது அரசியலமைப்பு கடமைகளுக்கு இணங்குவதை இது குறிக்கிறது.
- ஆளுநர்கள் தமது ஒப்புதலைக் காலவரையின்றி தாமதப்படுத்தவோ அல்லது நிறுத்தி வைக்கவோ கூடாது என்றும், அத்தகையச் செயலற்ற தன்மை என்பது பொறுப்பான நிர்வாகத்தின் கொள்கைகளைக் குறைமதிப்பிற்கு உட்படுத்துகிறது என்றும் உச்ச நீதிமன்றம் கூறியதைத் தொடர்ந்து ஆளுநரின் இந்த முடிவு எடுக்கப் பட்டுள்ளது.
- அக்டோபர் 31 ஆம் தேதி நிலவரப் படி, தமிழ்நாடு சித்த மருத்துவப் பல்கலைக்கழக மசோதா, 2025 உட்பட எட்டு மசோதாக்கள் இன்னும் ஆளுநரின் பரிசீலனையில் உள்ளன.
- இது முதலில் 2022 ஆம் ஆண்டில் அவையால் ஏற்றுக் கொள்ளப் பட்டாலும், அந்த மசோதாவைத் திருத்துவதற்கான சில பரிந்துரைகளுடன் ஆளுநரால் அது திருப்பி அனுப்பப் பட்டது.
- சட்டமன்றத்தின் குளிர்காலக் கூட்டத் தொடரில் ஏற்றுக்கொள்ளப்பட்ட 18 மசோதாக்களில், சட்டமன்ற உறுப்பினர்கள் மற்றும் கல்வியாளர்களின் பரவலான விமர்சனங்களுக்குப் பிறகு, மாநில அரசானது 2025 ஆம் ஆண்டு தமிழ்நாடு தனியார் பல்கலைக்கழகங்கள் (திருத்தம்) மசோதவினைத் திரும்பப் பெற்றுள்ளது.

- ஆளுநரால் ஒப்புதல் அளிக்கப்பட்ட பிற மசோதாக்களில் தமிழ்நாடு ஊதியம்/சம்பளம் வழங்கீட்டு (திருத்தம்) மசோதா; தமிழ்நாடு தள்ளுபடி/ரத்து மசோதா; தமிழ்நாடு ரத்து (இரண்டாவது) மசோதா; தமிழ்நாடு நெடுஞ்சாலைகள் (திருத்தம்) மசோதா; தமிழ்நாடு கடல்சார் வாரியம் (திருத்தம்) மசோதா; தமிழ்நாடு மின்சார நுகர்வு அல்லது விற்பனை மீதான வரி (திருத்தம்) மசோதா; தமிழ்நாடு தனியார் கல்லூரிகள் (ஒழுங்குமுறை) திருத்த மசோதா; மற்றும் தமிழ்நாடு ஒதுக்கீட்டு (எண்.6) மசோதா ஆகியவை அடங்கும்.




# தேசியச் செய்திகள்

## Know Your Vehicle செயல்முறை





- FASTag சரிபார்ப்பை எளிதாக்குவதற்காக என்று இந்திய தேசிய நெடுஞ்சாலைகள் ஆணையமானது (NHAI) Know Your Vehicle என்ற உங்கள் வாகனம் குறித்து அறிந்து கொள்ளுங்கள் (KYV) என்ற செயல்முறையை எளிதாக்கியுள்ளது.

- பயனர்கள் தற்போது வாகனப் பதிவு எண் தகடு மற்றும் FASTag குறியீட்டினைக் காட்டும் வகையில் வாகனத்தின் முன் பக்கப் புகைப்படத்தை மட்டுமே பதிவேற்ற வேண்டும்.
- பதிவுச் சான்றிதழ் (RC) விவரங்கள் ஆனது வாகனம் அல்லது கைபேசி எண்ணைப் பயன்படுத்தி VAHAN தரவுத் தளத்திலிருந்து தானாகவே பெறப்படும்.
- KYV கொள்கைக்கு முன் வழங்கப்பட்ட FASTags தவறாகப் பயன்படுத்தப்படுவதாக புகாரளிக்கப் படாதவரை செயலில் இருக்கும்.
- பல வழிப் பாதைக் கொண்ட தடுப்பிலா போக்குவரத்து சுங்கக் கட்டண முறை (MLFF) அறிமுகப்படுத்தப்படுவதற்கு முன்னதாக FASTag அமைப்பை வலுப்படுத்துவதே இந்த நடவடிக்கையின் நோக்கமாகும்.

## இராஷ்ட்ரிய ஏக்தா திவாஸ் 2025

- இராஷ்ட்ரிய ஏக்தா திவாஸ் (தேசிய ஒற்றுமை தினம்) ஆனது ஒவ்வோர் ஆண்டும் அக்டோபர் 31 ஆம் தேதியன்று கொண்டாடப்படுகிறது.
- இது இந்தியாவின் முதல் துணைப் பிரதமரும் உள்துறை அமைச்சருமான சர்தார் வல்லபாய் படேலின் பிறந்தநாளை நினைவுகூரும் வகையில் அமைந்துள்ளது.
- 2025 ஆம் ஆண்டிற்கான இத்தினக் கொண்டாட்டம் அவரது 150வது பிறந்தநாளைக் குறிக்கிறது.
- குஜராத்தின் நர்மதா மாவட்டத்தில் உள்ள ஏக்தா நகரில் முக்கிய தேசிய அளவிலான நிகழ்வு நடைபெற்றது.
- டெல்லியில் ஒரு மாபெரும்/முக்கிய நிகழ்ச்சி உட்பட நாடு தழுவிய அளவில் "Run for Unity" மாரத்தான் நடைபெற்றது.
- My Bharat/எனது பாரத் தளத்தில் இளையோர் விவகார அமைச்சகத்தினால் தொடங்கப் பட்ட "சர்தார்@150 ஒற்றுமை மார்ச் (யாத்ரா)", இளைஞர்களிடையே தேசபக்தி மற்றும் குடிமைப் பொறுப்பை ஊக்குவித்தது.




## இந்தியாவின் மேம்பட்ட உற்பத்தி செயல் திட்டம்

- நிதி ஆயோக் அமைப்பின் வளர்ந்து வரும் புதியத் தொழில்நுட்பங்களின் மையம்

ஆனது "Reimagining Manufacturing: India’s Roadmap to Global Leadership in Advanced Manufacturing" என்ற செயல் திட்டத்தினை வெளியிட்டது.

- இந்தச் செயல் திட்டத்தில் செயற்கை நுண்ணறிவு (AI), இயந்திர கற்றல் (ML), மேம்பட்ட பொருட்கள், டிஜிட்டல் இரட்டை மாதிரி மற்றும் எந்திரவியல்/ரோபாட்டிக்ஸ் ஆகியவை முக்கியத் தொழில்நுட்பங்களாக அடையாளம் காணப்படுகின்றன.
- 2035 ஆம் ஆண்டிற்குள் இந்தியாவின் உற்பத்தித் துறையின் பங்களிப்பை மொத்த உள் நாட்டு உற்பத்தியில் 25 சதவீதத்திற்கும் அதிகமாக அதிகரிக்க என்று 13 முன்னுரிமை உற்பத்தித் துறைகளில் இது கவனம் செலுத்துகிறது.
- 2035 ஆம் ஆண்டிற்குள் 100 மில்லியனுக்கும் அதிகமான வேலைவாய்ப்புகளை உருவாக்குவதையும், மேம்பட்ட உற்பத்திக்கான முதல் மூன்று உலகளாவிய மையங்களுள் இந்தியாவும் ஒன்றானதாக நிலை நிறுத்துவதையும் இந்தத் திட்டம் நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இந்த வளர்ந்து வரும் புதியத் தொழில்நுட்பங்களை ஏற்கத் தவறினால், 2035 ஆம் ஆண்டிற்குள் 270 பில்லியன் அமெரிக்க டாலர்கள் மதிப்பிலான இழப்பும், 2047 ஆம் ஆண்டிற்குள் உற்பத்தியின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 1 டிரில்லியன் அமெரிக்க டாலர்கள் இழப்பும் ஏற்படும்.
- இந்தச் செயல் திட்டமானது, இந்தியத் தொழில்துறை கூட்டமைப்பு (CII) மற்றும் டெலாய்ட் ஆகியவற்றுடன் இணைந்து உருவாக்கப்பட்டுள்ளது.




## சம்ரித் கிராம் ஒருங்கிணைந்த நேரடி மற்றும் டிஜிட்டல் சேவைகள்

- தொலைத்தொடர்புத் துறை (DoT) ஆனது கிராமப்புற இந்தியாவில் நிலவும் டிஜிட்டல் இடைவெளியை/பிளவைக் குறைப்பதற்காக சம்ரித் கிராம் ஒருங்கிணைந்த நேரடி மற்றும் டிஜிட்டல் சேவைகள் (பைஜிடல்) என்ற சோதனைத் திட்டத்தைத் தொடங்கி உள்ளது.
- மத்தியப் பிரதேசத்தில் அரி & உம்ரி, உத்தரப் பிரதேசத்தில் சௌரவாலா மற்றும் ஆந்திரப் பிரதேசத்தில் நரகோடுரு ஆகிய மூன்று கிராமங்களில் இந்த சோதனைத் திட்டத்தை செயல்படுத்துவதற்காக, இந்தியாவின் சிறப்பு தொலைத்தொடர்பு மையங்கள் (TCoE) அமலாக்கப் பங்குதார அமைப்புகளுடன் இந்த ஒப்பந்தங்களில் கையெழுத்திட்டன.
- ஒவ்வொரு கிராமத்திலும் கல்வி, சுகாதாரம், வேளாண்மை, இணைய ஆளுகை, இணைய வணிகம் மற்றும் நிதி உள்ளடக்கத்திற்கான ஒருங்கிணைந்த மையமாகச் செயல்படும் சம்ரிதி கேந்திரா அமைந்திருக்கும்.

- இந்தத் திட்டமானது, வீடுகளில் ஒளியிழை இணைப்பு (FTTH), கிராமப் பகுதி வலையமைப்புகள் மற்றும் பொது பயன்பாட்டு அருகலை ஹாட்ஸ்பாட்கள் ஆகியவற்றினை உள்ளடக்கிய பாரத்நெட் இணைப்பைப் பயன்படுத்துகிறது.
- கல்வி சார் சேவைகளில் திறன் மிகு வகுப்பறைகள், மிகை மெய் தோற்றம் (AR) மற்றும் மெய்நிகர் தோற்றம் (VR) அடிப்படையிலான கற்றல் மற்றும் அரசாங்க முன்னெடுப்புகளுடன் இணைக்கப்பட்ட டிஜிட்டல் திறன் வழங்கீடு ஆகியவை அடங்கும்.
- வேளாண் துறைக்கான ஆதரவில் இணைய இணைப்புப் பொருட்கள் (இணைய உலகம்) சார்ந்த மண் பரிசோதனை (IoT), ஆளில்லா விமானத்தின் உதவி மற்றும் திறன் மிகு பாசன அமைப்புகள் ஆகியவை அடங்கும் என்கின்ற அதே நேரத்தில் சுகாதாரப் பராமரிப்புத் துறையில் தொலைத்தொடர்பு வழி ஆலோசனை வழங்கல் மற்றும் சுகாதார சேவை ஏடிஎம்கள் ஆகியவை அடங்கும்.
- இந்த முன்னெடுப்பானது, நாடு தழுவிய அமலாக்கத்திற்கான விரிவுப்படுத்தக் கூடிய மற்றும் பிரதிபலிக்கக் கூடிய மாதிரியை உருவாக்குவதை நோக்கமாகக் கொண்டு உள்ளது என்பதோடு மேலும் தடையற்ற நேரடி மற்றும் டிஜிட்டல் ஒருங்கிணைப்பு மூலம் கிராமப்புறக் குடிமக்களுக்கு அதிகாரமளிக்கிறது.





## மாதிரி இளையோர் கிராம சபை – லோக் தந்திர கி பாத்ஷாலா

- மாதிரி இளையோர் கிராம சபை (MYGS) ஆனது, உண்மையான கிராம சபை செயல்முறைகளை உருவகப்படுத்துவதன் மூலம் அடித்தட்டு நிலையிலான ஜனநாயகத்தில் மாணாக்கர்களுக்கு நேரடி அனுபவத்தை வழங்குகிறது.
- இது பஞ்சாயத்து ராஜ் அமைப்பு குறித்த இளைஞர்களின் புரிதலை வலுப்படுத்துகிறது மற்றும் உள்ளாட்சி நிர்வாகத்தில் வெளிப்படைத்தன்மை, உள்ளடக்கம் மற்றும் பொறுப்புணர்வை ஊக்குவிக்கிறது.
- இந்த முன்னெடுப்பு 2020 ஆம் ஆண்டு தேசிய கல்விக் கொள்கையுடன் (NEP) இணைந்து, மாணாக்கர்களிடையே அரசியலமைப்பு விழுமியங்கள், சமூகப் பொறுப்பு மற்றும் குடிமை உணர்வை வளர்க்கிறது.
- ஜவஹர் நவோதயா வித்யாலயாக்கள் (JNV) மற்றும் ஏக்லவ்யா மாதிரி குடியிருப்புப்

பள்ளிகள் (EMRS) மாணாக்கர்கள் பங்கேற்பு ஆளுகையைப் புரிந்து கொள்வதற்காக பாத்திரமேற்று நடித்தல், விவாதங்கள் மற்றும் முடிவெடுக்கும் செயல்முறைப் பயிற்சிகளில் பங்கேற்கின்றனர்.

- MYGS தொகுதிகள் ஆனது பொருள், கற்றல், மகிழ்ச்சி மற்றும் பெருமை (MLJP) மற்றும் தேசிய அளவிலான முதன்மை பயிற்சியாளர் வழிகாட்டிகள், ஆசிரியர்களுக்கான உதவி தொகுதிகள் மற்றும் மதிப்பீட்டுக் கட்டமைப்பு ஆகியவற்றினை உள்ளடக்கிய MLJP கட்டமைப்பைப் பின்பற்றுகின்றன.
- பங்கேற்கும் பள்ளிகள் நிதி உதவியைப் பெறுகின்றன என்பதோடு மேலும் மாணாக்கர்களுக்குப் பாராட்டுச் சான்றிதழ்கள் வழங்கப்படுகின்றன.
- ஜனநாயகப் பங்கேற்பு மற்றும் நிலையான உள்ளூர் மேம்பாட்டிற்கு உறுதியளிக்கும் அதிகாரம் பெற்ற, தகவலறிந்த மற்றும் பொறுப்புள்ள இளம் குடிமக்களை உருவாக்குவதே MYGS முன்னெடுப்பின் நோக்கமாகும்.




## கடல்சார் இந்தியா 2030–2047

- இந்தியாவின் வர்த்தகத்தில், அளவின் அடிப்படையில் சுமார் 95 சதவீதமும், மதிப்பின் அடிப்படையில் சுமார் 70 சதவீதமும் கடல்சார் வழிகளில் நடைபெறுகிறது.
- கடல்சார் இந்தியக் கொள்கை 2030 (MIV 2030) ஆனது 3–3.5 லட்சம் கோடி ரூபாய் திட்டமிடப்பட்ட முதலீடுகளுடன் 150க்கும் மேற்பட்ட முன்னெடுப்புகளை உள்ளடக்கி உள்ளது.
- முக்கியத் துறைமுகங்கள் 2024–25 ஆம் நிதியாண்டில் தோராயமாக 855 மில்லியன் டன் சரக்குகளைக் கையாண்டன என்ற நிலையில் இது 2023–24 ஆம் நிதியாண்டில் 819 மில்லியன் டன்களாக இருந்தது.
- ஆண்டிற்கு 1,400 மில்லியன் மெட்ரிக் டன்களாக (MMTPA) இருந்த இந்தியாவின் துறைமுகச் செயல் திறன் ஆனது, மேம்படுத்தப் பட்ட திறன்களுடன் 2,762 MMTPA ஆக அதிகரித்து ள்ளது.
- இந்திய உள்நாட்டு நீர்வழி ஆணையம் (IWAI) ஆனது, 2025 ஆம் ஆண்டில் சரக்குப் போக்குவரத்து 146 மில்லியன் மெட்ரிக் டன்னாக இருந்ததாக அறிவித்துள்ளது என்ற நிலையில் இது 2014 ஆம் ஆண்டில் 18 மில்லியன் மெட்ரிக் டன்னாக இருந்தது.
- கடல்சார் அமிர்த கால் கொள்கை 2047 ஆனது துறைமுகங்கள், கடலோரக் கப்பல்

போக்குவரத்து, உள்நாட்டு நீர்வழிகள் மற்றும் கப்பல் கட்டுமானத்தில் சுமார் 80 லட்சம் கோடி ரூபாய் முதலீடுகளைப் பெறத் திட்டமிடுகிறது.




## சர்வதேசச் செய்திகள்

### உலகின் முதல் தலைமுறை அளவிலான புகையிலை தடை - மாலத்தீவுகள்




- 2007 ஆம் ஆண்டு ஜனவரி 01 ஆம் தேதிக்குப் பிறகு பிறந்த எவரும் புகையிலைப் பயன்படுத்துவதைத் தடை செய்த முதல் நாடாக மாலத்தீவுகள் மாறியுள்ளது.
- பாதிக்கப்பட்ட தலைமுறைக்கு சிகரெட் உட்பட அனைத்து விதமானப் புகையிலைப் பொருட்களையும் விற்பனை செய்வதையும் பயன்படுத்துவதையும் இச்சட்டம் தடை

செய்கிறது.

- ❖ நாட்டில் உள்ள அனைத்து வயதினரும் மின் சிகரெட்டுகள்/வேப்பிங் மற்றும் மின்னணு சிகரெட்டுகளைப் பயன்படுத்துவதற்கு தடை விதிக்கப்பட்டுள்ளது.
- ❖ வரம்பிற்குட்பட்ட வயதினருக்குப் புகையிலையை விற்கும் சில்லறை விற்பனையாளர்கள் மீது 50,000 மாலத்தீவிய ருஃபியா (சுமார் 2.9 லட்சம் ரூபாய்) அபராதம் விதிக்கப்படும்.
- ❖ மின் சிகரெட்டுகள் சாதனங்களைப் பயன்படுத்தும் நபர்களுக்கு 5,000 ருஃபியா (சுமார் ரூ. 29,000) அபராதம் விதிக்கப்படலாம்.
- ❖ உலகளாவியப் புகையிலைப் பயன்பாட்டு ஒழிப்பு/எண்ட்கேம் இயக்கத்தின் கீழ் புகையிலை இல்லாத தலைமுறை அணுகுமுறையின் ஒரு பகுதியாக இந்தக் கொள்கை உள்ளது.

# அறிவியல் மற்றும் தொழில்நுட்பச் செய்திகள்

## மருந்து கண்டுபிடிப்புக்கான செயற்கை நுண்ணறிவு கட்டமைப்பு




- ❖ வாத்வானி செயற்கை நுண்ணறிவு மற்றும் தரவு அறிவியல் பள்ளி, இந்தியத் தொழில் நுட்ப கல்விக் கழகம் - மதராஸ் (IIT-M) மற்றும் தி ஓஹியோ மாநில பல்கலைக்கழகம் ஆகியவற்றின் ஆராய்ச்சியாளர்கள் PURE என்ற செயற்கை நுண்ணறிவுக் கட்டமைப்பை உருவாக்கியுள்ளனர்.
- ❖ PURE என்பது கட்டமைப்பு சார்ந்து கட்டுப்படுத்தப்பட்ட மூலக்கூறு உருவாக்கத்திற்கான கொள்கை சார் வழிகாட்டுதல் கொண்ட பாரபட்சமற்றப் பிரதிநிதித்துவம் என்பதைக் குறிக்கிறது.
- ❖ இந்தக் கட்டமைப்பு ஆனது ஓர் ஆய்வகத்தில் உருவாக்குவதற்கு எளிதான மருந்துகள் போன்ற மூலக்கூறுகளை உருவாக்குகிறது.
- ❖ PURE ஆனது பல தசாப்தங்கள் ஆகின்ற மற்றும் மில்லியன் கணக்கான டாலர்கள் செலவாகின்ற ஆரம்பக் கட்ட மருந்து உருவாக்கக் காலத்தினைக் குறைப்பதாக

உறுதியளிக்கிறது.

- இந்த அமைப்பு ஆனது, உண்மையான உருவாக்கப் பாதைகளில் மூலக்கூறு உற்பத்தியை அடிப்படையாகக் கொண்டது மற்றும் மிகவும் சாத்தியமான உருவாக்க வழிகளைப் பரிந்துரைக்க தானாகவே வேதியியல் ஒற்றுமையைக் கற்கிறது.

# சுற்றுச்சூழல் செய்திகள்

## மேனார் - இந்தியாவின் பறவை கிராமம்




- இராஜஸ்தானில் உள்ள ஒரு கிராமம் மேனார் 100க்கும் மேற்பட்ட அரிய பறவை இனங்களைக் கொண்ட இடமாக அறியப்படுகிறது.
- இந்த கிராமம் ஈரநிலப் வளங்காப்பிற்கான ராம்சர் தளமாக அதிகாரப்பூர்வமாக அங்கீகரிக்கப்பட்டுள்ளது.
- பக்சி மித்ராஸ் (பறவைகளின் நண்பர்கள்) என்று அழைக்கப்படும் உள்ளூர்வாசிகள், பறவைகளின் எண்ணிக்கையை தீவிரமாகப் பாதுகாத்து கண்காணிக்கின்றனர்.
- பிரம்ம தலாப், தந்த் தலாப் மற்றும் கெரோடா தலாப் உள்ளிட்ட மேனாரின் குளங்கள், வலசை போகும் மற்றும் அங்கேயே காணப்படும் பறவைகளுக்கு முக்கிய வாழ்விடங்களாக செயல்படுகின்றன.
- இந்தக் கிராமம் 2023 ஆம் ஆண்டில் இந்தியாவின் சிறந்த சுற்றுலா கிராமமாக கௌரவிக்கப்பட்டது.
- மேனாரில் உள்ள பூர்வீக வளங்காப்பு நடைமுறைகள் நீர் கிழிப்பான் மற்றும் எகிப்திய கழுகு போன்ற அருகி வரும் உயிரினங்களைப் பாதுகாக்க உதவியுள்ளன.

# அறிக்கைகள் மற்றும் குறியீடுகள்

## காற்றுத் தரக் குறியீடு 2025

- 2025 ஆம் ஆண்டில் உலகின் மோசமான காற்றுத் தரங்கள் கொண்ட நகரங்கள் தரவரிசையில் இந்திய நகரங்கள் முதல் 40 இடங்களைப் பிடித்துள்ளன.
- இராஜஸ்தானில் உள்ள ஸ்ரீகங்காநகரில் 840 என்ற காற்றுத் தரக் குறியீட்டுடன் (AQI) மோசமான காற்றுத் தரம் பதிவாகியுள்ளது.
- ஹரியானாவில் உள்ள சிவானியில் 644 என்ற இரண்டாவது மிக உயர்ந்த AQI குறியீடு பதிவானது என்ற நிலையில் அதைத் தொடர்ந்து பஞ்சாபில் உள்ள அபோஹர் 634 குறியீட்டினைக் கொண்டுள்ளது.

- டெல்லி 433 என்ற AQI உடன் உலகளவில் 13வது இடத்தைப் பிடித்ததுடன், 'கடுமையான காற்று மாசுபாடு' என வகைப்படுத்தப்பட்டுள்ளது.
- இந்தப் பட்டியலில் உள்ள பிற முக்கிய நகரங்களில் வட இந்தியாவில் உள்ள ஹிசார், சுரு, சர்கி தாத்ரி மற்றும் ரோஹ்தக் ஆகியவை அடங்கும்.
- AQI பிரிவுகள் ஆனது, நல்ல நிலை (0–50), திருப்திகரமான நிலை (51–100), மிதமான மாசுபாடு (101–200), மோசமான நிலை (201–300), மிகவும் மோசமான நிலை (301–400), மற்றும் கடுமையான நிலை (401–500) என வரையறுக்கப்படுகின்றன.

**AIR QUALITY INDEX 2025**

Indian cities occupied the top 40 spots in the world's worst air-quality rankings in 2025

| Rank | City & State | AQI Value (2025) | Category |
|---|---|---|---|
| 1 | Sri Ganganagar, Rajasthan | 840 | Severe |
| 2 | Siwani, Haryana | 644 | Severe |
| 3 | Abohar, Punjab | 634 | Severe |
| 4 | Delhi | 433 | Severe |
| 5 | Hisar, Haryana | 425 | Very Poor |
| 6 | Churu, Rajasthan | 404 | Very Poor |
| 7 | Charkhi Dadri, Haryana | 394 | Very Poor |
| 8 | Rohtak, Haryana | 392 | Very Poor |
| 9 | HSI, Haryana | 392 | Very Poor |

## QS அமைப்பின் ஆசியத் தரவரிசை 2026

**QS Asia University Rankings 2026 - Top 10**

| Rank | Institution | Country | Academic Rep. | Intl Students | Faculty/Student |
|---|---|---|---|---|---|
| 1 | University of Hong Kong | Hong Kong | High | High | Strong |
| 2 | Peking University | China | High | Moderate | Strong |
| 3 | National University of Singapore | Singapore | High | High | Strong |
| 3 | Nanyang Technological University | Singapore | High | High | Strong |
| 5 | Fudan University | China | High | Moderate | Strong |
| 6 | HK Univ. of Science and Technology | Hong Kong | High | High | Strong |
| 7 | Chinese University of Hong Kong | Hong Kong | Strong | High | Strong |
| 7 | City University of Hong Kong | Hong Kong | Strong | High | Excellent |
| 9 | Tsinghua University | China | High | Moderate | Strong |
| 10 | Hong Kong Polytechnic University | Hong Kong | Strong | High | Strong |

- QS அமைப்பின் 2026 ஆம் ஆண்டிற்கான ஆசிய தரவரிசையில், ஏழு இந்தியத் தொழில் நுட்பக் கல்விக் கழகங்கள் (IIT) உட்பட இந்தியாவின் 10 முன்னணி நிறுவனங்களில் ஒன்பது நிறுவனங்கள், மேம்பட்ட மதிப்பெண்கள் இருந்த போதிலும், தரவரிசையில் அதிக சரிவைக் கண்டன.

- பட்டியலிடப்பட்ட சிறந்த இந்திய நிறுவனங்கள் IIT டெல்லி, இந்திய அறிவியல் கல்வி நிறுவனம் பெங்களூரு, IIT மதராஸ், IIT பம்பாய், IIT கான்பூர் மற்றும் IIT காரக்பூர் ஆகியவை ஆகும்.
- சீனா, சிங்கப்பூர், மலேசியா மற்றும் தென் கொரியாவில் உள்ள பல்கலைக்கழகங்கள் இந்திய நிறுவனங்களை விட சிறந்த மதிப்பெண்களைப் பெற்றன என்ற நிலையில் இது கிழக்கு மற்றும் தென்கிழக்கு ஆசியாவில் மிகவும் வலுவான போட்டியைப் பிரதிபலிக்கிறது.

# பிரபலமானவர்கள், விருதுகள், மற்றும் நிகழ்வுகள்

## உலக உணவுப் பரிசு - வேளாண் உணவு துறையின் முன்னோடிகள்




- பத்மஸ்ரீ விருது பெற்றவரும் புகழ்பெற்ற இந்திய சமையல்காரருமான சஞ்சீவ் கபூர், உலக உணவு பரிசு அறக்கட்டளையால் 2025 ஆம் ஆண்டின் சிறந்த வேளாண் உணவுத் துறை முன்னோடிகளில் ஒருவராக கௌரவிக்கப்பட்டார்.
- சமையல் துறை சார் புத்தாக்கங்களை நிலையான வேளாண்மை, ஊட்டச்சத்து ஆதரவு மற்றும் சமூக நலனுடன் இணைப்பதில் அவர் மேற்கொண்ட முயற்சிகளுக்காக இந்த அங்கீகாரம் வழங்கப்பட்டது.
- குழந்தைகளின் ஊட்டச்சத்தை மேம்படுத்துவதற்காக பள்ளிகள், விவசாயிகள் மற்றும் ஊட்டச்சத்து முயற்சிகளை இணைக்கும் நியூட்ரி பாத்ஷாலா எனும் திட்டத்தினை அவர் தொடங்கினார்.
- கபூர், இந்தியா முழுவதும் உள்ள பள்ளி மாணாக்கர்களுக்கு 2.5 மில்லியனுக்கும் அதிகமான ஊட்டச்சத்து நிறைந்த உணவுகளை வழங்க உதவியுள்ளார்.
- ஊட்டச்சத்துத் தரத்தை மேம்படுத்த இரும்புச்சத்து நிறைந்த கம்பு மற்றும் துத்தநாகம் நிறைந்த கோதுமை உள்ளிட்ட உயிரி ஊட்டங்கள் செறிவூட்டப்பட்டப் பயிர்களை அவர் ஊக்குவித்துள்ளார்.
- 1986 ஆம் ஆண்டு டாக்டர் நார்மன் போர்லாக் அவர்களால் நிறுவப்பட்ட உலக உணவுப்

பரிசு அறக்கட்டளை ஆனது அமெரிக்காவின் அயோவாவில் உள்ள டெஸ் மொயினஸ் எனுமிடத்தில் தலைமையகத்தினைக் கொண்டுள்ளது.

# முக்கிய தினங்கள்

## சர்வதேச உயிர்க்கோளக் காப்பக தினம் 2025 – நவம்பர் 03




- உயிர்க்கோளக் காப்பகங்களின் முக்கியத்துவம், வளங்காப்பு மற்றும் நிலையான மேலாண்மை குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்துவதே இந்த நாளின் நோக்கமாகும்.
- இது 2021 ஆம் ஆண்டில் யுனெஸ்கோ பொது மாநாட்டினால் ஏற்றுக் கொள்ளப்பட்டது.
- இந்த நாளுக்கான முன்மொழிவு ஆனது ஸ்பெயின் மற்றும் உருகுவே ஆகிய நாடுகளால் கூட்டாகச் சமர்ப்பிக்கப்பட்டது.
- 136 நாடுகளில் பரவியுள்ள உலக உயிர்க்கோளக் காப்பக வலையமைப்பில் (WNBR) 759 உயிர்க்கோளக் காப்பகங்கள் உள்ளன.
- இந்தியாவில் 18 உயிர்க்கோளக் காப்பகங்கள் உள்ளன, அவற்றில் 13 யுனெஸ்கோவின் WNBR வலையமைப்பில் சேர்க்கப்பட்டுள்ளன.
- தமிழ்நாடு, கர்நாடகா மற்றும் கேரளா முழுவதும் பரவியுள்ள நீலகிரி உயிர்க்கோளக் காப்பகம், இந்தியாவின் முதல் உயிர்க்கோளக் காப்பகம் ஆகும்.
- 2025 ஆம் ஆண்டில், இமாச்சலப் பிரதேசத்தில் உள்ள குளிர் பாலைவன உயிர்க்கோளக் காப்பகம் WNBR வலையமைப்பில் சமீபத்தில் சேர்க்கப்பட்ட இந்தியத் தளமாகும்.

★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★